கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம்,
22, ராஜா முத்தையா சாலை, சென்னை–3 அவர்களின் செயல்முறை ஆணைகள்.

.......

முன்னிலை : மேஜர்.வி.எஸ்.ஜெயகுமார்., (ஓய்வு),
கூடுதல் இயக்குநர்.

இருப்பிடம் : சென்னை – 600 003.

.......

செயல்முறை ஆணை எண்.8503/2020/நிர்1 நாள். 24.02.2022

பொருள் : தமிழ்நாடு அரசுப்பணி – முன்னாள் படைவீரர் நலத்துறை – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் 2018–2019 மற்றும் 2019–2020ம் ஆண்டுகளுக்கான தொகுதி-IV போட்டித் தேர்வு – முன்னாள் படைவீரர் நலத்துறை அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களை பணிவரன்முறை செய்தல் – ஆணைகள் வழங்குதல் – தொடர்பாக.

சுட்டு :

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடிதம் எண்.2369/ PSD-I/2020, நாள்.26.05.2020 மற்றும் 20.10.2021.
2. கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை–3 அவர்களின் செயல்முறை ஆணை எண்.8503/2020/நிர்1, நாள்.29.10.2021.

*********

**ஆணை:**

சுட்டு (2)–ல் காணும் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தற்காலிகமாக தெரிவு செய்து, முன்னாள் படைவீரர் நலத்துறை அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்காலிக இளநிலை உதவியாளர் ஆக நியமன ஆணைகள் வழங்கப்பட்டவர்களின் பணியினை, இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்பு செய்த நாள் முதல் கீழ்வருமாறு பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | இளநிலை உதவியாளரின் பெயர் (திரு | பணிபுரியும் அலுவலகம் | பணியேற்பு செய்த நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | இர. சக்திவேல் | இளநிலை உதவியாளர்,<br>முன்னாள் படைவீரர் நல இயக்ககம்,<br>சென்னை–03 | 08.11.2021 முற்பகல் |
| 2. | த. சிவராஜ் | இளநிலை உதவியாளர்,<br>முன்னாள் படைவீரர் நல அலுவலகம்,<br>வேலூர் மாவட்டம். | 08.11.2021 முற்பகல் |

2. சுட்டு (1)—ல் காணும் 26.05.2020 நாளிட்ட தேர்வாணையக் கடிதத்தில் பத்தி எண். 5—ல் குறிப்பிட்டுள்ளவாறு, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, மேற்குறிப்பிட்ட பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

> "The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination - IV for the year 2018-2019 and 2019-2020".

3. மேற்கண்ட பணியாளர்களின் பணி, இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தனியர்கள் பணியேற்பு செய்த நாள் முதல் தொடர்ச்சியான மூன்று ஆண்டு காலத்தில் இரண்டு ஆண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவத்தில் தக்கவைக்கப்படுகிறார்கள்.

4. தனியர்கள் தகுதிகாண் பருவ காலத்தில் கீழ்க்குறிப்பிட்ட துறை தேர்வுகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

1. தமிழ் நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் .
2. பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சி.

5. பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம், தனியர்களின் பணிப் பதிவேடு மற்றும் பணிவரன்முறை செய்திடும் பதிவேட்டிலும் உரிய பதிவுகள் செய்திடுமாறு இயக்குநரின் நேர்முக உதவியாளர் மற்றும் வேலூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. இச்செயல் முறை ஆணை பெற்றமைக்கு ஏற்பளிப்பு செய்திடல் வேண்டும்.

(ஒம்)/— வி.எஸ்.ஜெயகுமார்.
கூடுதல் இயக்குநர்.

பெறுநர்

சம்பந்தப்பட்ட பணியாளர்கள்

<u>நகல்:</u>

1. இயக்குநரின் நேர்முக உதவியாளர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை—03.
2. உதவி இயக்குநர், முன்னாள் படைவீரர் நல அலுவலகம், வேலூர் மாவட்டம்.
3. சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை—1.
4. மாவட்ட கருவூல அலுவலர், வேலூர்.
5. நிர்வாகம்—3 பிரிவு.
6. முதன்மை ஆணைத் தொகுப்பு.
7. இருப்பு கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

இயக்குநரின் நேர்முக உதவியாளர்.